# ஸ்ரீ பிள்ளைலோகாசார்யார் அரிளிச்செய்த

# ப்ரபந்நபரித்ராணம்

முமுக்ஷுவாய், மோக்ஷார்த்தமாக ஸர்வேச்வரனைப் பற்றியிருக்குமவனுக்கு அநந்யகதித்வமும், ஆகிஞ்சந்யமும் வேணும். அநந்யகதித்வமாவது – "களைவாய் துன்பங்களையாதொழிவாய் களைகண்மற்றிலேன்" என்கிறபடியே ஸர்வேச்வரனையொழிய வேறொரு ரக்ஷகரில்லை என்றிருக்கை. ப்ராதாக்கள், புத்ரர்கள், மாதாபிதாக்கள், ப்ரஹ்மருத்ராதிகள் தொடக்கமானவர்கள் ரக்ஷகராகக் குறையென்னென்னில் – ப்ராதாக்கள் ரக்ஷகரல்லர் என்னுமிடம் வாலிபக்கலிலும், ராவணன் பக்கலிலும் காணலாம். புத்ரர்கள் ரக்ஷகரல்லர் என்னுமிடம், ருத்ரன் பக்கலிலும், கம்ஸன் பக்கலிலும் காணலாம். மாதாபிதாக்கள் ரக்ஷகரல்லர் என்னுமிடம், கைகேயிபக்கலிலும், ஹிரண்யன் பக்கலிலும் காணலாம். மாதாபிதாக்கள் – யௌவநவிரோதி என்று உபேக்ஷித்தல், க்ஷாமகாலம் வந்தவாறே ஆள்பார்த்துத் தூற்றிலேபொகடுதல், அர்த்தக்ஷேத்ராதிகளுக்காக எதிரிட்டுக்கொல்லுதல், முடியும் அவஸ்தையிலே

a. "சோர்வினால் பொருள் வைத்துண்டாகில் சொல்லு சொல்லென்று சுற்றுமிருந்து" என்கிறபடியே, ஈஸ்வரனை ஸ்மரித்துக் கரைமரஞ் சேரவொட்டாதபடி அலைத்தல் முடித்தல் செய்யாநிற்பர்கள். ஸ்த்ரீகளுக்கு பர்த்தாக்கள் ரக்ஷகரல்லர் என்னுமிடம், தர்மபுத்ராதிகள் பக்கலிலும், நளன்பக்கலிலும் காணலாம். இவர்கள் ரக்ஷகரல்லரேயாகிலும் நாட்டார்க்குக் கண்காட்டியாய்ப் போருகிற சந்த்ராதித்யர்கள் ரக்ஷகராகக் குறையென் ? என்னில்; அவர்களும், ஈஸ்வராஜ்ஞைக்கஞ்சி, தாங்கள் நினைத்தபடி ஸஞ்சரிக்கப்பெறாதே.

b. நாழிகை கூறிட்டு உதிபத்து அஸ்தமிப்பதாய்க்கொண்டு போருகையாலும், ஹிரண்ய ராவணாதிகள் கையிலே அகப்பட்டு அவர்களுக்கு இழி தொழில்செய்து திரிவார் சிலராகையாலும் ரக்ஷகராக மாட்டார்கள். த்ரைலோக்யத்துக்கும் பாலகனான இந்த்ரனும், 'எப்போதோ நம் படம் நழுவப்புகுகிறது' என்றருஞ்சி சாபோபஹதனாய், இந்த்ரஜித்தின் கையிலே அகப்பட்டுக்கட்டுண்டு, மஹாபலிபோல்வார் கையிலே ஐச்வர்யத்தைப் பறிகொடுத்து, கண்ணுங்கண்ணீருமாய், கழுத்துங் கப்படமுமாய்க்கொண்டு திரிவானொருவனாகையாலே அவனும் ரக்ஷகனாகமாட்டான். ப்ரஹ்மாவும் – மதுகைடபர்கள் கையிலே அகப்பட்டு, வேதங்களைப் பறிக்கொடுத்து, 'கண்ணிழந்தேன், தநமிழந்தேன்' என்று நிலந்துழாவுகையாலும், ருத்ரங்கையிலே தலையறுப்புண்கையாலும் ரக்ஷகனாமாட்டான்.

ருத்ரனும் – ஸகலப்ராணிகளையும் ஸம்ஹரிக்கையே தொழிலாகவுடையனாய், விடாயர் முகத்திலே நெருப்பைச் சொரிந்தாற்போலேயிருக்கத்

a. தழல்நிற வண்ணனாய், தன்னை ஆச்ரயித்தவர்களை 'அறுத்துத்தா * பொரித்துத்தா' என்று கொடுந்தொழில்களைச் செய்வித்துக் கொள்ளுகையாலும், தன்னை ஆச்ரயித்து வாணனை, 'தலையில் பூவாடாதே நோக்குகிறேன்' என்று ப்ரதிஜ்ஞைபண்ணி, தன்னைத்தொழுத கைகளைக் கள்ளிக்காடு சீய்த்தாற்போலே சீய்க்கக்கண்டு, 'உயிருண்டாகில் உப்புமாறியுண்ணலாம் என்று நெற்றியில் கண்ணைப் புதைத்துக்கொண்டு நழுவினவனாகையாலும், லோகக்குருவாய்த் தனக்குப் பிதாவான ப்ரஹ்மாவின் தலையைத்திருகிப் பாதகியாய், கூறுசெய்தவூரிலே குறும்புசெய்து, கையுங் கைத்தளையுமாய்க் கொண்டு திரிவாரைப்போலே, கையும் கபாலமுமாய், திறந்துகிடந்த வாசல்கள்தோறும் புக்குத் தன்னைவெளியிட்டுக்கொண்டு திரிவானொருவனாகையாலும் ரக்ஷகனாகமாட்டான். இனி, அர்த்தம் ரக்ஷகமாமோ? என்று நிருப்பித்தால், கள்ளர்கொள்ளுதல், காமங்கொள்ளுதல், கோமுற்றவர் கொள்ளுதல், ஜ்ஞாதிகொள்ளுதல், வ்யாதிகொள்ளுதல், பிறரோடே எதிரிட்டு விஷபக்ஷணம் பண்ணித் தன்னைத்தானே முடித்துக்கொள்ளும்படி பண்ணுதல் செய்கையாலே அர்த்தமும் ரக்ஷகமாகமாட்டாது. ஈச்வரன், மாதாபிதாக்கள் கைவிட்ட அவஸ்தையிலும்

b. 'பின்னுநின்று அடியேனுக்குற்றானாய் வளர்த்தென்னுயிராகி நின்றான்" எங்கிறபடியே, தன்னுருக்கெடுத்து வேற்றுக்கொண்டு தாய்முகம் காட்டியும், இன்சொல்லுச்சொல்லியும், ப்ராதாக்களும் பர்த்தாக்களும் நெகிழநின்றவன்று தான் ஏறிட்டுக்கொண்டு கழுத்திலே ஓலைகட்டித் தூதுபோயும், புருவம் நெறித்தவிடத்திலே தேரை நடத்தியும், மார்விலே அம்பேற்றும், சாவாமல் நோக்கியும், செத்தாரை மீட்டும், நாராயணத்வப்ரயுக்தமான உதரத்தரிப்பாலே அகவாயிலேநின்று ஸத்தையை நோக்கிக்கொண்டு போருகையாலே, இவனே எல்லார்க்கும் ரக்ஷகன்.

இனி ஆகிஞ்சந்யமாவது – கர்மஜ்ஞாந பக்திகளிலும், அவற்றுக்கு ஹேதுவான ஆத்மகுணங்களிலும் அந்வயமின்றிக்கே, அவற்றுக்கு விபரீதங்களானவற்றாலேதான் பரிபூர்ணனாயிருக்கிற இருப்பையும், தன்னுடைய ஸ்வரூபம் ஸர்வப்ரகாரத்தாலும் ஈச்வரனுக்கு அத்யந்த பரதந்த்ரமாயிருக்கிற இருப்பையும்

அநுஸந்தித்து, 'நம் கார்யத்துக்கு நாம் கடவோமல்லோம்' என்றிருக்கை. இவை இரண்டையுமுடையனாய், ஈஶ்வரனையே உபாயமாகப் பற்றுகையாலே நிர்ப்பரனாயிருக்குமவனுக்கு ஶரீராவஸாநகாலத்திலே நிர்ப்பரனாயிருக்குமவனுக்கு ஶரீராவஸாந காலத்திலே ப்ராப்தியணித்தானவாறே, நயாமி என்று அருளிச்செய்தபடியே ஈஶ்வரன் தானே சரக்காளாய் வந்து, அர்ச்சிராதி மார்க்கத்தாலே பரமபதத்தேறக் கொண்டுபோய், நித்யமுக்தரோடே ஒரு கோவையாக்கி, நித்யகைங்கர்யத்தையும் கொடுத்தருளும்.

ப்ரபந்நபரித்ராணம் முற்றிற்று.
ஸ்ரீ பிள்ளைலோகாசார்யார் திருவடிகளே ஶரணம்.
ஜீயர் திருவடிகளே ஶரணம்.